1987 மார்ச் 2]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைச் சபாநாயகர் அவர்களே, பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அறிவித்த அந்த அறிவிப்பிலிருந்து என்னுடைய கேள்வி எழுகிறது. கிராமப்புறங்களில் குழாய்க் கிணறுகள் போடுகின்றனர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையின் மீது எந்தவிதமான விவாதமும் கூடாது. அது நடைமுறை அல்ல. (குறுக்கீடுகள்) பேசும்போது உறுப்பினர்கள் விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். அவை நடவடிக்கை குறித்ததாக இருக்கும் என்றுதான் நான் எ. எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்களைப் பேச அனுமதித்தேன். வேறு வார்த்தைகளைப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) பி.ஏ.சி.யிலே நேரம் பற்றிப் பேசலாம். அங்கே பேசலாம். அமைச்சர் அறிக்கையின் மீது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது.

(ஆ) விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் குறித்து.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது தமிழக அரசு விவசாயிகளுக்குக் கடன்களைத் திருப்பிச் செலுத்த 28–2–1987 வரையில் அனுமதி அளித்திருக்கின்றது. அதற்காக விவசாயிகள் சார்பாக நன்றி சொல்லிக் கொள்கிறேன். விவசாயிகள் இன்னும் கால அவகாசம் கேட்டிருக்கின்றார்கள். அரசு இன்னும் 15 தேதி வரைக்கும் அனுமதி அளித்தால் நிச்சயமாகக் கட்டிவிடுவார்கள். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கொள்கை விவகாரமாக இருக்கின்றது. இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டாம்.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையினை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

"இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகளின் மீதான குழுவின் (1980–81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் (சிவில் இனங்கள்) மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை,"

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS